<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>
<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2020–ம் ஆண்டு ஜூலை மாதம் 31–ம் தேதி ( 31.07.2020) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

<u>மன்றபொருள். 1.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு சொந்தமான 30 வார்டுகளிலும் உள்ள 24 வாட்ஸ் LED மின் விளக்குகள் 130 எண்ணிக்கை பழுதடைந்ததை பழுது பார்த்து மீண்டும் பொருத்தி எரிய வைத்த பணிக்கு ரூ. 60000/– திருமதி . S . புவனேஸ்வரி அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 1305/2020/இ1)**

**தீர்மான எண் : 96 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.**

<u>மன்றபொருள். 2.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பின்புறம் மேல் நிலை நீர்த்தக்க தொட்டிக்கு பயன்படுத்தப்படும் CCTV பழுத அடைந்ததை பழுது நீக்கியதற்கும் மற்றும் ஒரு ஓயர்லஸ் மவுஸ் கேமரா பொருத்தியதற்கும் ரூ.3000/– திரு.S. முகம்மது தாஜீதின் , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண் . 1795/2020/இ1)**

**தீர்மான எண் : 97 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.**

**மன்றப்பொருள்.3.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN 31 AH 6645ல் இன்ஜின் மற்றும் இதர குறைபாடுகளை பழுதுநீக்கம் சரி செய்திடும் பணி மேற்கொள்ளவும், தகுதிசான்று பெறுவதற்கு உரிய அனைத்து பணிகள் செய்து வழங்கிடவும், அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக V,S,T சர்வீஸ் ஸ்டேசன் கடலூரில் பழுதுகள் விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அதன் படி பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட வாகனத்தை உடன் பழுது நீக்கம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.90,000/–யை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**(ந.க.எண் 1768/2020/H1)**

**அலுவலகக்குறிப்பு . 1.**மன்றம் அனுமதிக்கலாம் .
2. பொது சுகாதாரம் அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி வழங்கப்பட்டு பணி உத்திரவு வழங்கியதினை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**தீர்மான எண் : 98 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள். 4 .** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தொற்று நோய் பரவாமல் தடுத்திடும் பொருட்டு அப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் (அலுவலக பணியாளர்கள், மருத்துவ பணியாளர்கள், அம்மா உணவக பணியாளர்கள், கணக்கெடுப்பில் பங்கு பெறும் பணியாளர்கள், பரப்புரையாளர்கள், DBC பணியாளர்கள், தொற்று கண்டுள்ள பகுதியில் வசிக்கும் ஏழ்மை நிறைந்தவர்கள்

மற்றும் முக்கியமாக தூய்மை பணியாளர்கள் நிரந்தரம், ஒப்பந்த பணியாளர்களுக்கு) அனைவருக்கும் தினமும் இரண்டு வீதம் ஒருமுறை பயன்படுத்தக் கூடிய முக கவசம் 15000 எண்ணிக்கைகள் ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1030/2020/எச்1, நாள்17.04.2020ன்படி ஒன்று ரூ.10/– வீதம் 15000 எண்ணிக்கைகள் சென்னை மேற்கு தாம்பரம் டால்பின் டெய்லர்ஸ் நிறுவனத்தில் 21.04.2020ல் பெறப்பட்டமைக்கு உரிய பட்டியல் தொகை ரூ.150000/–யை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் படி மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மான எண் : 99 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.**

**ந.க.எண்.1030/2020/எச்1.**

**மன்றப்பொருள். 5 .** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவில் உள்ள மேற் கூறையில் (Zub Board MDC Board ) முதல் மாடியில் உள்ள கழிவறை தண்ணீர் கசிவு காரணமாக கீழ் தளத்தில் பொதுப்பிரிவில் உள்ள மேற்கூரை பழுதடைந்து கீழே விழுந்துவிட்டது . மேலும் இதன் காரணமாக மிக மோசமான துர்நாற்றம் வீசுவதாகவும் மற்றும் அலுவலக பணிகள் பார்க்க இயலாமல் உள்ளதாகவும் இதனால் தொற்று நோய் பரவும் நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் தற்சமயம் கொரான வைரஸ் தாக்கம் காரணமாக அலுவலக சுற்று சுவரை சீர் செய்து வண்ணம் தீட்டி கொடுக்குமாறும் அலுவலக மேலாளர் அவர்கள் கோரியுள்ளார்கள் . எனவே தற்சமயம் கொரான வைரஸ் தாக்கம் இருப்பதால் மேற்படி பணியை தொற்று நோய் பராவாமல் தடுக்கும் வகையில் அவசர அவசியம் உடன் பணியை செய்து முடிக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.150000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. கழிவறை தண்ணீர் கசிவு காரணமாகவும் தொற்று நோய் பராவாமல் இருக்கவும் மற்றும் கொரான வைரஸ் தாக்கம் இல்லாமல் இருக்கவும் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 1722/2020/இ1) .**

**தீர்மான எண் : 100 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள். 6 .** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN-31/ BAE 1896 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதில் சைடு புட்டஸ்ட் இரண்டு பக்கமும் ஆங்கிள் பொருத்தி சரி செய்யப்பட்டது மற்றும் முன் பின் பக்கம் பம்பர் செய்யப்பட்தற்கு ரூ.4350/– செலவினம் திரு .P. மணி , ஓட்டுனர் அவர்களால் செலவு செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது . அதனால் இத் தொகையை திரு .P. மணி , ஓட்டுனர் அவர்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1995/2020/இ1.**

**தீர்மான எண் : 101 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள். 7 .** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள பொது மக்கள் அனைவருக்கும் ஆழ்குழாய் கிணறு மோட்டார் பம்பில் இருந்து தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது . அனைத்து மேல்நிலை தண்ணிர் தொட்டி வளாகத்தில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது . இதன் காரணமாக அடிக்கடி மின் உயர் அழுத்தம் ஏற்படும் பொழுது மின் மோட்டார்கள் மற்றும் பம்புகள் பழுதடைந்து விடுகின்றது . இதனால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் முற்றிலும் தடைபடுகின்றது . மேலும் வரும் நாட்களில் வடகிழக்கு பருவமழை காரணமாக மின் தடை அதிகமாக ஏற்பட வாய்ப்பு உள்ளதால் மேற்படி பம்புகள் பழுதடைந்தால் அதற்குரிய மாற்று மோட்டார் பம்புகள் நகராட்சியில் இருப்பு இல்லை . எனவே குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி மின் மோட்டார் பம்புகளை வாங்கி வைக்க

தயாரிக்கப்பட்டள்ள மதிப்பீடு ரூ. 350000/– நகராட்சி குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண்.2031 /2020/இ1)**

**தீர்மான எண் : 102 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள். 8 .** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ந.க..எண். 9025/2020/E3 நாள். 17.07.2019 ன் படி தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் (TURIP) 2020–21 ஆம் ஆண்டின் கீழ் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு ரூ.110/–இலட்சம் மதிப்பீட்டிற்கு உள்ள பணிகளை ஒப்பந்தபுள்ளிக்காக 24.07.2020 அன்று மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் விளம்பரம் செய்த வகையில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புதுறை , சென்னை – 9 அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு MAA Comunications Limited , Old No . 287/1 & New No. 195 . Kilpauk Garden . Main Road , சென்னை அவர்களுக்கு ரூ.18848/– பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1506 /2020/இ1)**

**தீர்மான எண் : 103 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள். 9 .** கடலூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில், நெல்லிக்குப்பம் நகராட்சியில் உள்ள அனைத்து வீடுகளிலும் வசிக்கும் மக்களுக்கு கொரோனா தொற்று உள்ளதா ? என வீடு வீடாக சென்று பரிசோதனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்பணிக்கு நகராட்சியில் உள்ள வாக்குசாவடி நிலை அலுவலர்களுக்கு (BLO) பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் வீடுகள் தோறும் வசிக்கும் மக்களுக்கு காய்ச்சல் கண்டறிவதற்கு ஒவ்வொரு வாக்கு சாவடி நிலை அலுவலர்களுக்கும் ஒரு Thermo Scanner கருவி வழங்கிட வேண்டும் எனவும், அதன்மூலம் அனைத்து வீடுகளிலும் பரிசோதனை செய்து சமர்பித்திட வேண்டும் எனவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 20.07.2020 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு Thermo Scanner கருவி 2500 தேவைப்படுகிறது என்பதினைவிநியோகம் செய்திட மாவட்ட ஆட்சியர் அலுவலர் மூலம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனமாக m/s STC Technologies Pvt Ltd, 2nd Avenue, Anna Nagar, Chennai – 600040 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி ஏற்று பணி உத்திரவு மாவட்டம் முழுவதற்கும் சேர்த்து வழங்கப்பட்டு உள்ளது. அதன் அடிப்படையில் நெல்லிக்குப்பம் நகராட்சியில் உள்ள 38 வாக்கு சாவடி நிலை அலுவலர்களுக்கு 38 எண்ணிக்கைகள் பெறப்பட்டு வழங்கப்பட்டது. எனவே, ஒன்றின் விலை ரூ.1400/– வீதம் (38 x 1400= 53,200/-) m/s STC Technologies Pvt Ltd, Chennai – 40 அவர்களுக்கு அவசர அவசியத்தினை கருதி தமிழ்நாட மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் ரூ.53,200/– வழங்க மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் : 104 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது.**

**மன்றப்பொருள். 10 .** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடுகள் தோறும் குப்பை தரம் பிரித்து பெறும் பணி BOV(Battery Operator Vehicle) வாகனங்கள் – 13 எண்ணிக்கை 10.04.2019ல் பெறப்பட்டு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. வாகனங்கள் வாங்கப்பெற்று ஓராண்டு காலத்திற்கு மேல் கடந்து விட்டப்படியால் சிறு சிறு பழுதுகள் ஏற்ப்பட்டு அவ்வப்போது வாகனம் பணிக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, நகராட்சியில் உள்ள 13 BOV வாகனங்களையும் எவ்வித பழுதும் ஏற்படாத வண்ணமும் பணிக்கு பாதகம் ஏற்படும் நிலையில் வண்டிகள் எதுவும் நிறுத்தம் இல்லாமல் தினமும் பயன்படுத்தும் நிலையில் BOV வாகனங்கள் பணிக்கு தினமும் நிரந்தரமாக ஒடுவதற்கு

வருடாந்திர பராமரிப்பு பணியினை மேற்க்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளலாம். 13 வாகனங்களுக்கும் வருடாந்திர பராமரிப்பு உத்தேசமாக ரூ.2.25/–இலட்சத்திற்கு (அனைத்து வரிகள் உட்பட) செலவினம் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் : 105 அலுவலக குறிப்பினை ஏற்று அனமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள். 11 .** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் – மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கைபேசி வாயிலாகவும், தினசரி நாளிதழ்கள் வாயிலாகவும், கடலூர் மாவட்ட பகுதிகள் கொரோனா தொற்று நோயுடன் டெங்கு காய்ச்சல் கண்டவர்கள் பட்டியலும் சேர்த்து வருகின்ற காரணத்தினால், டெங்கு காய்ச்சல் முற்றிலும் கட்டுப்படுத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலம் அறிவுறுத்தப்படுவதினால், தற்சமயம் மழை பெய்து மழைநீர் தேங்கும் நிலை ஏற்ப்பட்டு வருவதினால் DBC பணியாளர்கள் வார்டு பகுதிகள் முழுவதும் கொசு புழுக்கள் உருவாகும் கொள்கலன்கள் அழித்திடும் பணிக்கு DBC பணியாளர்கள்–20 நபர்கள் மட்டும் உள்ள காரணத்தினால், கபசுர குடிநீர், நிலவேம்பு குடிநீர் வழங்கிடுவதற்கு 20 DBC பணியாளர்களுடன் கூடுதலாக 5 பணியாளர்கள் சுய உதவிக் குழு மூலம் பெற்று, டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், புழுக்கள் உருவாகும் கொள்கலன்கள் அழித்திடும் பணி, கபசுர குடிநீர் / நில வேம்பு குடிநீர் வழங்கும் பணி மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் பணிகளுக்கு ஆகஸ்ட் – 2020 மாதத்தில் 20 பணியாளர்களுடன் கூடுதலாக ஐந்து பணியாளர்கள் மகளிர் சுய உதவிக் குழு மூலம் நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் ஊதியம் வழங்கிட அனுமதியும் உத்தேச செலவினம் ரூ.30,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் : 106 அலுவலக குறிப்பினை ஏற்று அனமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி